Dhinathdhalam@gmail.com www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 026 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 26.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode



**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

# புதிய கட்சி தொடங்கினார் கே.சந்திரசேகர ராவ் மகள் கவிதா; அனல் பறக்கும் தெலங்கானா அரசியல் களம்



ஹைதராபாத்: தெலங்கானா முன்னாள் முதலமைச்சர் கே.சந்திரசேகர ராவின் மகள் கே.கவிதா, டிஆர்எஸ் என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்கி இருக்கிறார்.

தெலங்கானாவின் முன்னாள் முதலமைச்சரான கே. சந்திரசேகர ராவின் குடும்பத்தில் கடந்த சில மாதங்களாகவே பிரச்சினை இருந்து வருகிறது. இதன் காரணமாக, கடந்த சிலமாதங்களுக்குமுன்பு பாரத் ராஷ்டிர கட்சியிலிருந்து அவரது மகள் கே. கவிதா வெளியேறினார். கட்சியிலிருந்து வெளியேறிய அவர், 'தெலங்கானா ஜாக்ருதி' என்ற அமைப்பை உருவாக்கி அதன்மூலம் பொதுசேவையாற்றி வந்தார்.

இந்நிலையில், 'தெலங்கானா ராஷ்டிர சேனா' (TRS) என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்கி இருப்பதாக அறிவித்திருக்கிறார் கவிதா. கட்சியின் பெயரை அறிவித்த கையோடு, 1969ஆம் ஆண்டு தெலங்கானாவை தனி மாநிலமாக்கக் கோரி நடைபெற்ற போராட்டத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

அதற்காக, ஹைதராபாத்தில் உள்ள கன்பார்க் – அமரவீரர் ஸ்தூபத்திற்கு சென்ற கவிதா, மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பி.ஆர்.எஸ் கட்சியிலிருந்து விலகிய இவர், தெலங்கானாவில் இதுவரை செயல்படுத்தப்படாத திட்டங்களை செயல்படுத்துவதையும், மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதையும் நோக்கமாக கொண்டு புதிய கட்சி தொடங்கவிருப்பதாக நேற்று (ஏப்ரல் 24) அறிவித்த நிலையில், இன்று கட்சியை தொடங்கியுள்ளார்.

தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பிறகு ANI செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்த கவிதா, பி.ஆர்.எஸ் கட்சியிலிருந்து தான் வெளியேறவில்லை எனவும், தானும் தனது ஆதரவாளர்களும் வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அவர் பேசுகையில், "தெலங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டபோது, இங்குள்ள மக்களின் விருப்பங்கள் மற்றும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவே பாரத ராஷ்டிர கட்சி உருவாக்கப்பட்டது. ஆனால் இப்போது கட்சி தொடங்கப்பட்டதற்கான நோக்கத்தையே மாற்றி அமைத்துவிட்டனர்.

இதனால் மக்கள் கட்சியின்மீது நம்பிக்கை இழந்துவிட்டனர். ஒரு அரசியல் கட்சி அடிப்படை நோக்கத்திலிருந்து திசைமாறும்போது மக்கள் மத்தியில் நிலைத்திருக்க முடியாது. எனவே மக்களின் விருப்பங்கள் மற்றும் திட்டங்களை நிறைவேற்ற புதிய கட்சி தேவைப்படுகிறது. அதற்காகவே இப்போது நான் ஒரு புதிய கட்சியை தொடங்கி இருக்கிறேன்" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "பி.ஆர்.எஸ் கட்சிக்கு எனது தந்தை தலைவராக இருக்கிறார். ஆனால் அந்த கட்சியிலிருந்தே எங்களை வெளியேற்றிவிட்டனர். அந்த விவகாரத்திற்குள் இப்போது நான் செல்ல விரும்பவில்லை.

நான் தெலங்கானாவின் மகள். என் ரத்தத்தில் தெலங்கானாவின் உறுதித்தன்மை இருக்கிறது. எங்களது லட்சியத்தின்மீது பிடிவாதமாகவும், அர்ப்பணிப்புடனும் இருப்பவர்கள் நாங்கள். தெலங்கானா வளர்ச்சிக்காக எங்கள் வாழ்நாளின் 20 வருடங்களை அர்ப்பணித்திருக்கிறோம். எங்களுடைய பழைய கட்சி துணையாக நின்றாலும், நிற்காவிட்டாலும் நாங்கள் மக்கள் பணியாற்றப் போகிறோம்" என்றார்.

முன்னதாக, கட்சிக்கு எதிராக செயல்பட்டதாகக் கூறி கடந்த 2025, செப்டம்பரில் கவிதா பி.ஆர்.எஸ்ஸிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு ஜனவரியில் அவர் கட்சியிலிருந்தே வெளியேறினார்.

பி.ஆர்.எஸ்ஸின் தலைவர்களான டி. ஹரிஷ் ராவ் மற்றும் ஜே. சந்தோஷ் ராவுக்கு இருவரும் முதலமைச்சர் ரேவந்த் ரெட்டியுடன் இணைந்து, தங்களது குடும்பத்தையும், கட்சியையும் அழிக்க சதி செய்வதாக கவிதா கூறிய கருத்தால் அவர் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

# தமிழகம், மேற்கு வங்கத்தில் எங்கும் மறு வாக்குப்பதிவு இல்லை: தேர்தல் அதிகாரிகள் தகவல்




புதுடெல்லி: கடந்த 23-ம் தேதி நடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் மேற்கு வங்க சட்டப்பேரவை முதற்கட்டத் தேர்தல் ஆகியவற்றில் எந்த வாக்குச் சாவடியிலும் மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிடப்படவில்லை என்று இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தின் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த 23-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 75,064 வாக்குச்சாவடிகளில் வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில், வரலாறு காணாத அளவாக 85.15% வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

அதே நாளில் மேற்கு வங்க சட்டப்பேரவைக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தமுள்ள 294 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 152 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. 44,376 வாக்குச் சாவடிகளில் வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த தேர்தலில் 92% வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், இவ்விரு மாநில தேர்தல்களில் எங்கும் மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிடப்படவில்லை என்று இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த முடிவை எடுப்பதற்கு முன், தேர்தல் பார்வையாளர்களின் கருத்துகள், கள அறிக்கைகள் உள்ளிட்ட வழக்கமான ஆய்வு முறைகள் அனைத்தும் கவனமாக பரிசீலிக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மறு வாக்குப்பதிவை அவசியமாக்கும் வகையிலான பெரிய அளவிலான இடையூறுகள் ஏதும் இன்றி வாக்குப் பதிவு நிறைவடைந்துள்ளதே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

# கம்பம் பட்டாசு ஆலையில் விபத்து: 2 தொழிலாளர்கள் உயிரிழப்பு

கம்பம்: கம்பம் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி இருவர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

கம்பம் பாரதியார் நகரைச் சேர்ந்த திருப்பதி. இவர் கம்பம் மேற்கு பகுதியான காட்டுப்பள்ளி வாசல் சாலையில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு அரசு உத்தரவின்படி கடந்த 21-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி பட்டாசு ஆலை மூடப்பட்டது. மீண்டும் (சனிக்கிழமை) காலை தொழிற்சாலை செயல்படத் தொடங்கியது. இங்கு கம்பம் பாரதியார் நகரைச் சேர்ந்த அய்யப்பன் (27), நாகார்ஜூன் (22), சாலிமரம் தெருவைச் சேர்ந்த சூர்யா (22) மற்றும் நெல்லு குத்தி புளியமரம் தெருவை சேர்ந்த தினேஷ் (20), ஆகியோர் வேலை செய்து கொண்டிருந்தனர்.



இந்நிலையில் சூர்யா, தினேஷ் ஆகியோர் வெடி மருந்து எடுப்பதற்காக கிடங்கைத் திறந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக பலத்த சத்தத்துடன் வெடிமருந்து வெடித்தது. இதில் சூர்யா, தினேஷ் தூக்கி எறியப்பட்டு உடல் சிதறி உயிரிழந்தனர். அருகில் இருந்தவர்கள் கம்பம் வடக்கு காவல் நிலையம் மற்றும் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

போலீஸார் மற்றும் தீயணைப்புத் துறையினர் சிதறிக் கிடந்த சூர்யா, தினேஷின் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பினர். கம்பம் வடக்கு போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.800 உயர்ந்தது

பவுனுக்கு ரூ.800 உயர்ந்துள்ளது. வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.5 உயர்ந்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பின் நிலை ஆகியவற்றால், தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஏற்ற இறக்கமாக இருக்கிறது.

அந்தவகையில், சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சனிக்கிழமை கிராமுக்கு ரூ.100 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,200-க்கும், பவுனுக்கு ரூ.800 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,13,600-க்கும் விற்பனையாகிறது.



24 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.109 உயர்ந்து ஒரு கிராம் ரூ.15,491-க்கும், 18 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.90 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11,850-க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் ரூ.270-க்கும், கட்டி வெள்ளி கிலோ ரூ.2,70,000-க்கும் விற்பனையாகிறது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஈரான் போர் தாக்கம்: அமெரிக்காவின் ஆயுத கையிருப்பு கணிசமாகக் குறைந்தது!



வாஷிங்டன்: ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த மார்ச் 28-ம் தேதி தாக்குதலை தொடங்கின. இந்த போர் 38 நாட்கள் நடைபெற்றது. அதன் பின் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 2 வார கால சண்டை நிறுத்த ஒப்பந்தம் அறிவித்தார்.

இந்நிலையில் அமெரிக்க ராணுவம் கூறியதாவது: ஈரானில் மொத்தம் 13,000-க்கும் மேற்பட்ட இலக்குகளைத்தாக்கினோம். ஈரான் போரில் 1,000-க்கும் மேற்பட்ட டொமஹாக் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டன. இது அமெரிக்க ராணுவம் ஒவ்வொரு ஆண்டும் வாங்கும் எண்ணிக்கையை விட 10 மடங்கும் அதிகம். ஒரு டொமஹாக் ஏவுகணையின் விலை 3.6 மில்லியன் டாலர்.

தொலைதூர இலக்குகளைத் தாக்கும் திறன் படைத்தவை. ஈரான் போரில் 1,000-க்கும் மேற்பட்ட டொமஹாக் ஏவுகணை பயன்படுத்தப்பட்டதால், அமெரிக்காவின் டொமஹாக் ஏவுகணையின் கையிருப்பு 3,000-மாக குறைந்து உள்ளது.

இதே போல், எதிரி விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து அழிக்க 1,200 பேட்ரியாட் ஏவுகணைகளை ஈரான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது.

இதன் விலை 4 மில்லியன்டாலருக்குமேலாகும். கடந்தாண்டில் 600 பேட்ரியாட் ஏவுகணைகளை மட்டுமே அமெரிக்கா உற்பத்தி செய்தது. மேலும், வானில் இருந்து தரை இலக்குகளை தாக்கும் 1,100 (ஜாஸ்மர்) ஏவுகணைகளையும் அமெரிக்க ராணுவம் ஈரான் போரில் பயன்படுத்தியது. இதன் காரணமாக இந்த வகை ஏவுகணைகள் அமெரிக்கராணுவத்தில் தற்போது 1,500 மட்டுமே இருப்பில் உள்ளது. இது 600 மைல் தூரமுள்ள இலக்குகளைத் தாக்கும்.

இதன் விலை 1.1 மில்லியன் டாலர். 1,000-க்கும் மேற்பட்ட ஏடிஏசிஎம்எஸ் என்ற தரை இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகளையும் ஈரான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது. இவ்வாறு அமெரிக்க ராணுவம் கூறியுள்ளது. ஈரான் போர் காரணமாக ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்களில் ஆயுத கையிருப்பு குறைந்துள்ளது.

ஈரானின் விலை குறைந்த ட்ரோன் தாக்குதலை சமாளிக்க, அமெரிக்கா அதிகவிலையுள்ள பேட்ரியாட் ரக ஏவுகணைகளைப் பயன்படுத்தியது. காலியான ஆயுதங்களை மீண்டும் வாங்க கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்றத்தில் பென்டகன் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கு வெகு நாட்களாகும் எனத் தெரிகிறது.

# உக்ரைன் போரில் 10 இந்தியர்கள் உயிரிழப்பு: உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்



புதுடெல்லி: உக்ரைன் போரில் 10 இந்தியர்கள் உயிரிழந்து இருப்பதாகவும் பலர் விருப்பப்பட்டு சென்றதாகவும் உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யாவில் வசிக்கும் திவ்யா தாக்கல் செய்த பொதுநல மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: 26 இந்தியர்கள் சுற்றுலா பயணிகளாகவும், படிக்கவும் ரஷ்யாவுக்கு கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபரில் சென்றனர். வேலைவாய்ப்பு வழங்குவதாக அழைக்கப்பட்ட அவர்களின் பாஸ்போர்ட், அடையாள ஆவணங்கள் பறிக்கப்பட்டு, மிரட்டி உக்ரைனுடனான போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களை கண்டறிந்து தாயகம் அனுப்பி வைக்கும் நடவடிக்கையை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. இந்த பொதுநல மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது. அப்போது மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டி தாக்கல் செய்த மனுவில் "26 நபர்களில் 10 பேர் உக்ரைன் உடனான போரில் உயிரிழந்து இருப்பதாகவும், உயிரிழந்தோரின் குடும்பங்களுடன் வெளியுறவுத்துறை அமைச்சகம் தொடர்பில் இருப்பதாகவும், உக்ரைன் உடனான போரில் பலர் விருப்பப்பட்டு சென்றிருப்பதாகவும், சில ஏஜெண்டுகள் தவறாக வழிநடத்தி இருக்ககூடிய சம்பவங்களும் இருப்பதாகவும், ரஷ்யாவுக்கு 215 இந்தியர்கள் சென்றிருப்பதாகவும்" தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நிலை அறிக்கை தாக்கல் செய்ய வெளியுறவு அமைச்சகத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை உச்ச நீதிமன்றம் தள்ளிவைத்துள்ளது.

# தேனியில் இரு சக்கர வாகனத்தை திருடிய மர்ம நபர்கள்: சிசிடிவி வீடியோ வைரல்



தேனி: பட்டப் பகலில் அலுவலகம் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருசக்கர வாகனத்தை மர்ம நபர்கள் திருடிச் செல்லும் சிசிடிவி காட்சி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தேனி மாவட்டம் ஸ்ரீரெங்கபுரம் கிராமத்தில் உள்ள ராம் நகர் பகுதியில் வசித்து வருபவர் ராஜப்பன். இவர் கடந்த சில ஆண்டுகளாக அப்பகுதியில் கேபிள் டிவி நடத்தி வருகிறார். இந்த நிலையில் நேற்று காலை 9 மணி அளவில் வழக்கம் போல் கேபிள் டிவி அலுவலகத்திற்கு தனது இரு சக்கர வாகனத்தில் சென்று அதனை வெளியே நிறுத்திவிட்டு அலுவலகத்திற்குள் சென்று உள்ளார். சிறிது நேரம் கழித்து அலுவலகத்தில் இருந்து வெளியே வந்த ராஜப்பன் தனது இருசக்கர வாகனம் நிறுத்தி வைத்திருந்த இடத்தில் இல்லாததால் அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராவை ஆய்வு செய்தார். அப்போது ஒரு இரு சக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத மூன்று நபர்களில் ஒருவர் மட்டும் ராஜப்பனின் இருசக்கர வாகனத்தைத் திருடிச் செல்லும் காட்சி சிசிடிவியில் பதிவாகி இருந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

இதனைத் தொடர்ந்து தனது இருசக்கர வாகனம் திருடு போன சம்பவம் குறித்து சிசிடிவி ஆதாரத்துடன் வீரபாண்டி காவல் நிலையத்தில் ராஜப்பன் புகார் அளித்துள்ளார். தற்போது இரு சக்கர வாகனத்தை மர்ம நபர்கள் திருடிச் செல்லும் சிசிடிவி காட்சி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த புகார் குறித்து வீரபாண்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பட்டப் பகலில் அலுவலகத்தின் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு சக்கர வாகனத்தை திருடி சென்ற மர்ம நபர்களால் அப்பகுதியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

மேலும், கடந்த சில மாதங்களாக இரு சக்கர வாகன திருட்டு சம்பவம் தேனி சுற்று வட்டார பகுதியில் அதிகரித்து வரும் நிலையில், போலீசார் இரவு நேரத்தில் ரோந்து பணியை அதிகரித்து, சந்தேகத்திற்குரிய வகையில் குடியிருப்பு பகுதிகளில் வலம் வரும் நபர்கள், இளைஞர்களை தீவிர விசாரணை செய்ய வேண்டும் எனவும், மேலும் வாகனங்களை விரைந்து மீட்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# விவிலிய காலத்து பழங்குடியின வம்சாவளியைச் சேர்ந்த மணிப்பூர் யூதர்களுக்கு இஸ்ரேலில் வரவேற்பு

டெல் அவிவ்: மணிப்பூரில் வசித்து வந்த விவிலிய காலத்து இஸ்ரேலின் பழங்குடியின வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் 250-க்கும் மேற்பட்ட இந்தியர்கள், வியாழக்கிழமை இஸ்ரேல் சென்றடைந்தனர்.

இந்தியாவில் இருந்து அவர்களை இஸ்ரேலில் குடியமர்த்துவதற்காக அந்நாட்டு அரசு மேற்கொண்டு வரும் சிறப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக அவர்கள் நேற்று முன்தினம் டெல் அவிவ் விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இஸ்ரேலிய தேசியக் கொடியின் நிறங்களான நீலம் மற்றும் வெள்ளை நிற பலூன்களால் அமைக்கப்பட்ட வளைவின் கீழ் வந்திறங்கிய அவர்களை, அங்கிருந்தவர்கள் பாரம்பரிய யூதப் பாடல்களைப் பாடி உற்சாகமாக வரவேற்றனர்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் இருந்து சுமார் 4,600 'பெனே மெனாஷே' சமூகத்தினரை இஸ்ரேலுக்கு அழைத்து வர அந்நாட்டு அரசு கடந்த நவம்பரில் முடிவெடுத்தது. அதன் பிறகு இஸ்ரேல் வந்தடைந்த முதல் குழுவினர் இவர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. கி.மு. 720-ல் அசிரியன் படையெடுப்பாளர்களால் நாடு கடத்தப்பட்ட இஸ்ரேலின் 10 பழங்குடி இனங்களில் ஒன்றான 'மெனாஷே' வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

சுமார் 20 ஆண்டுகளாக இஸ்ரேலில் வசித்து வரும் தாகன் சோலட் என்பவர், சகோதரராக கருதும் தனது நண்பரை வரவேற்க விமான நிலையம் வந்திருந்தார். அவர் கூறுகையில், "மணிப்பூரில் நாங்கள் அண்டை வீட்டார். எங்கள் கிராமத்தில் இருந்த ஒருசில யூதக் குடும்பங்களில் எங்களது குடும்பங்களும் அடங்கும். ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு எனது நண்பரை இன்று பார்க்கிறேன். இந்தியாவில் இருந்தபோது எனது மகனை அவர் தனது கைகளிலேயே சுமந்து வளர்த்தார்" என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

வரலாற்றுப் பின்னணி

'ஷாவே இஸ்ரேல்' என்ற அமைப்பின் தகவல்படி, கடந்த 1990-களிலிருந்து சுமார் 4,000 பெனே மெனாஷே சமூகத்தினர் இஸ்ரேலில் குடியேறியுள்ளனர். இன்னும் 7,000-க்கும் மேற்பட்டோர் இந்தியாவில் வசித்து வருகின்றனர். இவர்களது செவிவழி வரலாற்றின்படி, பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இவர்கள் பெர்சியா, ஆப்கானிஸ்தான், திபெத் மற்றும் சீனா வழியாக இடம் பெயர்ந்துள்ளனர்.

அவ்வாறு இடம் பெயர்ந்த காலத்திலும் விருத்தசேதனம் போன்ற யூத மதச் சடங்குகளை இவர்கள் தொடர்ந்து கடைபிடித்து வந்துள்ளனர். பின்னர், 19-ம் நூற்றாண்டில் மணிப்பூருக்கு வந்த மிஷனரிகளால் இவர்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றப்பட்டனர் என்பது இவர்களது வரலாற்றுப் பின்னணியாக அறியப்படுகிறது.

தற்போது இடம் பெயர்ந்து வந்துள்ள 250 பேரும் வடக்கு இஸ்ரேலில் குடியமர்த்தப்பட உள்ளனர். இஸ்ரேலிய குடியுரிமை பெறுவதற்காக அவர்கள் முறைப்படி யூத மதத்துக்கு மாற வேண்டும் என்பது கவனிக்கத்தக்கது. விமான நிலையத்தில் இவர்களை வரவேற்ற இஸ்ரேல் குடியேற்றத் துறை அமைச்சர் ஓஃபிர் சோஃபர் கூறுகையில், "இது ஒரு வரலாற்றுத் தருணம். ஆண்டுக்கு 1,200 பேர் வீதம், இந்தச் சமூகத்தைச் சேர்ந்த அனைவரையும் இங்கு அழைத்து வருவதற்கான ஒரு மாபெரும் திட்டத்தின் தொடக்கம்தான் இது" என்றார்.

# நாசிக் டிசிஎஸ் மதமாற்ற வழக்கு: திடீரென பணி விலகிய ஊழியர்களிடம் மீண்டும் எஸ்ஐடி தீவிர விசாரணை



மும்பை: மகாராஷ்டிராவின் நாசிக் நகரில் டிசிஎஸ் நிறுவனத்தின் பிபிஓ அலுவலகம் செயல்படுகிறது.

இந்த நிறுவனத்தில் பெண் ஊழியர்களை அதிகாரிகள் மிரட்டி பாலியல் வன்கொடுமை, பாலியல் துன்புறுத்தல் மற்றும் மதம் மாற கட்டாயப்படுத்தியதாக புகார் எழுந்துள்ளது.

கடந்த 2022 பிப்ரவரி முதல் 2026 மார்ச் வரை நடந்ததாக கூறப்படும் இந்த குற்றங்கள் தொடர்பாக 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குழுத்தலைவர்கள் மற்றும் மனிதவளத் துறையின் உதவிப்பொது மேலாளர் உட்பட 8 ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முக்கிய குற்றவாளியாக கருதப்படும் பெண் அதிகாரி நீடா கான் தலைமறைவாக இருக்கும் நிலையில் அவரை கைது செய்ய 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இந்த வழக்கில் 2022 மற்றும் 2024-க்கு இடையில் திடீரென பதவி விலகிய முன்னாள் ஊழியர்களிடம் எஸ்ஐடி மீண்டும் விசாரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. பாதிக்கப்பட்ட பெண் ஊழியர்கள், நிறுவனத்தின் மனிதவளத் துறைக்கு 78-க்கும் மேற்பட்ட மின்னஞ்சல்கள் அனுப்பியதாகவும், பலமுறை தொலைபேசி அழைப்புகள் செய்ததாகவும் கூறுகின்றனர். ஆனால், எதன் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கைதானவர்களில் ஒருவரான மனிதவள அதிகாரி அஸ்வினி சைனானி, பாதிக்கப்பட்ட பெண்ணிடம் "இதுபோன்ற விஷயங்கள் நடப்பது சகஜம்தான்" என்று கூறி, புகார் அளிப்பதைத் தடுத்ததாகவும், இந்த விஷயத்தைகைவிடுமாறு வற்புறுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அவர் ஏப்ரல் 28 வரை 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அஸ்வினி, இந்துப் பெண் ஊழியர்களைக் குறிவைத்து வாட்ஸ் அப் குழுக்களை உருவாக்கி, அவர்களின் விருப்பத்துக்கு எதிராக மதச் சடங்குகளில் ஈடுபடுமாறு கட்டாயப் படுத்தியதாக தெரியவந்துள்ளது. இந்த கும்பலால் வேறு பெண்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் புகார் அளித்திட தனி வாட்ஸ் அப் எண்ணை போலீஸார் அறிவித்துள்ளனர். இந்த விவகாரத்தில் மேலும் சிலர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கைதிகளை அழைத்துச் செல்லும் போலீஸ் வாகனங்களில் சிசிடிவி கேமராக்கள்



சென்னை:

கைதிகளை நீதிமன்றம் மற்றும் சிறைக்கு அழைத்துச் செல்லும் போலீஸ் வாகனங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சென்னையில்கொலை, கொள்ளை, வழிப்பறி உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்கள், நீதிமன்ற உத்தரவுப்படி புழல், சைதாப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு சிறைகளில் அடைக்கப்படுகின்றனர்.

மேலும், அவர்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களில் நடைபெறும் போது, காவல் வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டு ஆஜர் படுத்தப்படுகின்றனர்.

பின்னர்,அதேவாகனத்தில் அழைத்து வந்து மீண்டும் சிறையில் அடைக்கப்படுகின்றனர். பல நேரங்களில் வெளி மாவட்ட நீதிமன்றங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

சில நேரங்களில், பயங்கர ரவுடிகள் மற்றும் கொடூர குற்றவாளிகளை வாகனங்களில் நீதிமன்றத்துக்கு அழைத்து ச் செல்லப்படும் போதோஅல்லதுதிரும்பி வரும்போதோ பாதுகாப்புக்காக உடன்வரும் போலீஸாருடன் வீண் தகராறில் ஈடுபடுகின்றனர்.

சிலசமயம் போலீஸார் தாக்கப்படுகின்றனர். ஆனால், இதன் உண்மைத் தன்மை வெளிவருவது இல்லை. யார் மீது தவறு? தாக்குதல் நடந்ததற்கு என்ன காரணம் என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

மேலும், நீதிமன்றத்தில் விசாரணை முடிந்து வாகனத்தில் சிறைக்கு அழைத்துச் செல்லும்போது கைதிகளின் உறவினர்கள் கஞ்சா பொட்டலங்களை காவல் வாகனங்களில் வீசும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

இத்தகைய பிரச்சினைகளைத் தடுக்க போலீஸார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனால், எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இதையடுத்து, சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் சென்னை போலீஸ் அதிகாரிகள் ஒருங்கிணைந்து ஆலோசனைநடத்தியதில்,கைதிகளை அழைத்துச் செல்லும் காவல் வாகனங்களில் சிசிடிவி கேமரா பொருத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, முதல் கட்டமாக சென்னையில் சிறைக் கைதிகளை அழைத்துச்செல்லும்50-க்கும் மேற்பட்ட காவல் வாகனங்களில் நவீன சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

# திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயிலில் சித்திரை பிரம்மோற்சவம் மே 1ல் தொடங்குகிறது



சென்னை:திருவல்லிக்கேணி பார்த்த சாரதி சுவாமி கோயில் சித்திரை பிரம்மோற்சவ விழா மே 1-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. கருட சேவை 3-ம் தேதியும், தேரோட்டம் 7-ம் தேதியும் நடைபெறுகின்றன.

108 வைணவ திவ்யதேசங்களில் ஒன்றாக விளங்குவது சென்னை திருவல்லிக்கேணி பார்த்த சாரதி பெருமாள் கோயில். இத்தலத்தில் யோக நரசிம்மர் மேற்கு நோக்கி அருள்பாலிக்க, உற்சவரான தெள்ளிய சிங்கர், ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியாருடன் பக்தர்களுக்கு சேவை சாதிக்கிறார்.

இங்கு ஆண்டுதோறும் பார்த்தசாரதி சுவாமிக்கு சித்திரை மாதத்திலும், நரசிம்மருக்கு ஆனி மாதத்திலும் பிரம்மோற்சவம் நடைபெறுவது வழக்கம். அந்த வகையில், பார்த்தசாரதி பெருமாள் சித்திரை பிரம்மோற்சவம் மே மாதம் நடைபெற உள்ளது.

இதையொட்டி, ஏப்.30-ம் தேதி அங்குரார்ப்பணம் எனும் முளையிடுதல் விழா நடக்கிறது. மே 1-ம் தேதி கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவம் தொடங்குகிறது. அன்று இரவு 7.45 மணி அளவில் புன்னை வாகனத்தில் சுவாமி வீதிஉலா நடைபெறும்.

மே 2-ம் தேதி காலை 6.15 மணிக்கு சேஷ வாகனம், இரவு 7.45 மணிக்கு சிம்ம வாகனத்தில் உற்சவர் தெள்ளிய சிங்கர் எழுந்தருள்கிறார். பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்வான கருட சேவை மே 3-ம் தேதி நடைபெறும். அன்று அதிகாலை 5 மணிக்கு கோபுர வாசல்தரிசனமும்,இரவு அம்ச வாகனப் புறப்பாடும் நடக்கிறது. 4-ம் தேதி சூரியப் பிரபை வாகனம்,5-ம்தேதி காலைபல்லக்கில் நாச்சியார் திருக்கோலமும், இரவு அனுமந்தவாகனப்புறப்பாடும் நடைபெறுகிறது.

6-ம் தேதி அதிகாலை சூர்ணாபிஷேகம், அதைத் தொடர்ந்து, ஆனந்த வாகனம், இரவு யானை வாகனப் புறப்பாடு நடைபெறுகிறது. பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்வான தேர்த் திருவிழா 7-ம் தேதி நடைபெறுகிறது.

அதிகாலை 3.30 மணி முதல் 4.30 மணிக்குள் உற்சவர் தேரில் எழுந்தருள்கிறார். காலை 7 மணிக்குபக்தர்கள் வடம் பிடிக்க, தேரோட்டம் தொடங்குகிறது. இரவு 9 மணிக்கு தோட்டத் திருமஞ்சனம் நடக்கிறது.

8-ம் தேதி பல்லக்கில் வெண்ணெய்தாழி கண்ணன் திருக்கோலத்தில் சுவாமி புறப்பாடு நடைபெறுகிறது. 9-ம் தேதி காலை 6. 15 மணிக்கு ஆளும் பல்லக்கு, காலை 11 மணிக்கு தீர்த்தவாரி நடக்கிறது. அன்று இரவு கொடியிறக்க நிகழ்வு நடைபெறும். 10-ம் தேதி இரவு 10 மணிக்கு சிறிய திருத்தேர் நிகழ்வுடன் பிரம்மோற்சவ விழா நிறைவடைகிறது.

# பிரச்சாரத்தின்போது புறாவுக்கு தவெக வண்ணம்: விஜய்க்கு பீட்டா அமைப்பு எதிர்ப்பு



சென்னை: தேர்தல் பிரச்சாரத்தின்போது புறாவுக்கு தவெக வண்ணம் பூசப்பட்டு பறக்க விடப்பட்ட விவகாரத்தில் கட்சியின் தலைவர் விஜய்க்குபீட்டாஅமைப்பு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

திருச்சியில் ஏப்.19-ம் தேதி தவெக தலைவர் விஜய் மேற்கொண்ட பிரச்சாரத்தின் போது, தவெக கட்சியின் வண்ணம் பூசப்பட்ட புறா பறக்க விடப்பட்டது. இது தொடர்பாக பீட்டா இந்தியா அமைப்பு கட்சியின் தலைவர் விஜய்க்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்த கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது: சமீபத்தில் தவெக கட்சிப் பிரச்சாரத்தில்புறாவுக்குவண்ணம் பூசப்பட்டு பறக்க விட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வண்ணம் பூசப்பட்ட புறா, இரைச்சலான மற்றும் கூட்ட நெரிசலான சூழலில் விடுவிக்கப்படுவது அந்தப் பறவைகளுக்குக் கடுமையான மன அழுத்தத்தையும், உடல்ரீதியான காயங்களையும், நீண்டகால பாதிப்புகளையும் ஏற்படுத்துகிறது.

பறவைகளின் இறகுகளில் பூசப்படும் பெயின்ட் அல்லது சாயங்கள், அவற்றின் வெப்ப ஒழுங்கு முறை மற்றும் பறக்கும் திறனைப் பாதிப்பதோடு, அவை தங்களைச் சுத்தம் செய்யும்போது அந்த நச்சுப் பொருட்களை உட்கொள்ளவும் வாய்ப்புள்ளது.

இந்தச் செயல் விலங்குகள் மீதான கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கடுமையான விதி மீறலாகும். மேலும் இது தேர்தல் பிரச்சாரத்தின் போது விலங்குகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையை மீறுவதாகவும் உள்ளது.

இந்த விவகாரத்தில் தவெக தலைவர் விஜய் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, வண்ணம் பூசப்பட்டு பயன்படுத்தப்பட்ட அந்தப் பறவைகளை, உரிய சிகிச்சை மற்றும் மறுவாழ்வு அளிப்பதற்காக உடனடியாகப் பீட்டாவிடம் ஒப்படைக்கவேண்டும்.

தேர்தல் பிரச்சாரங்களில் விலங்குகளைப் பயன்படுத்துவதை முற்றிலும் தடை செய்யும் வகையில் ஓர் உறுதியான கொள்கையை வகுக்க வேண்டும். கட்சியின் தொண்டர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு விலங்குகள் பாதுகாப்பு குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

சட்டம் மற்றும் விலங்குகளின் நலனைக் கருத்தில் கொண்டு, தனது தலைமைத் துவத்தின் கீழ் இத்தகைய தவறான செயல்களைத் தடுத்து நிறுத்த விஜய் நடவடிக்கை வேண்டும். இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு தங்கம்




கெய்ரோ: எகிப்தின் கெய்ரோ நகரில் ஐஎஸ்எஸ்எஃப் ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் 10 மீட்டர் ஏர் ரைபிள் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் சாம்பவி கிஷிர்சாகர், திவ்யான்ஷு தேவாங்கன் ஜோடி 499.9 புள்ளிகளை குவித்து உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றது.

சீன தைபேயைச் சேர்ந்த சாய் சீ-யிங், சென் யூ-ஆன் ஜோடி 498.3 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கத்தையும், அதே நேரத்தில்பிரான்ஸைச்சேர்ந்தடிஃபென் போம்ஸ், காஸ்பர்ட் லெசியர் ஜோடி 434.4 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றது.

# தனியார் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து இயக்கலாம்: போக்குவரத்துத்துறை முன்னாள் செயலர் பணிந்திர ரெட்டி கருத்து



சென்னை: தனியார் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து இயக்கினால் கூட்டம் அதிகரிக்கும் போது பேருந்து தட்டுப்பாட்டைத் தவிர்க்கலாம் என போக்குவரத்துத் துறை முன்னாள் செயலர்பணீந்திரரெட்டி தெரிவித்துள்ளார்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தங்களது சொந்த ஊரில் வாக்களிக்க கடந்த 21, 22 ஆகிய தேதிகளில் புறப்பட்டுச் சென்றனர்.

பண்டிகைக் காலம் போல் ஏராளமானோர் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டுச் சென்றதால் சென்னையிலிருந்து திருச்சி,மதுரை,கோவை, நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி,திருப்பூர், ஈரோடு, சேலம் உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கு வழக்கமான பேருந்துகளுடன் சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்பட்டன.


இதனால் பேருந்து நிலையம் முழுவதும் பயணிகள் கூட்டம்காணப்பட்டது. நீண்ட நேரம் காத்திருந்தும் தங்கள் ஊர்களுக்கான பேருந்துகள் வராமல் இருந்ததால் ஆயிரக்கணக்கான பயணிகள் தவித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த பயணிகள் ஏராளமானோர் போக்குவரத்து அதிகாரிகளிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் பேருந்து நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த விவகாரம் சர்ச்சையான நிலையில் பண்டிகைக் காலங்கள், தேர்தல் போன்ற கூட்டம் அதிகம் இருக்கும் நேரங்களில் ஒப்பந்த முறையில் வாடகைக்கு எடுத்து இயக்கினால் இந்த கூடுதல் பேருந்து தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என முன்னாள் போக்குவரத்துத் துறை செயலர் பணீந்திர ரெட்டி அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் இது போன்ற அதிகப்படியான பயண தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கானஅமைப்புகுறைவாக உள்ளது. தனியார் பேருந்துகளை ஒப்பந்த அடிப்படையில் எடுத்து இயக்குவது இந்த தேவையைப் பூர்த்தி செய்ய உதவலாம். தெற்கு ரயில்வேயும் இந்த நேரங்களில் பங்களிப்பை அளிக்க வேண்டும். பொதுமக்களும் தங்களின் பயணத்தை திட்டமிட வேண்டும். குடும்பமாகச் செல்வோர் வார நாட்களிலும், அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் வார இறுதி நாட்களில் தங்கள் பயணங்களை திட்டமிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கோடநாடு வழக்கு ஜூன் 19ம் தேதிக்கு தள்ளிவைப்பு



ஊட்டி: கோடநாடு வழக்குவிசாரணைஜூன் 19-க்கு தள்ளிவைத்து நீதிபதி உத்தரவிட்டார். நீலகிரி மாவட்டம் கோடநாடு எஸ்டேட்டில் 2017-ஏப்ரலில் காவலாளி கொலை செய்யப்பட்டு, பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இதுதொடர்பாக10பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கை சிபிசிஐடி விசாரித்து வருகிறது. இந்த வழக்கு உதகை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அரசு தரப்பில், செல்போன் உரையாடல் மற்றும்தகவல் பரிமாற்றங்கள் குறித்து குஜராத்தில் உள்ள பிஎஸ்என்எல் அலுவலகத்தில் இருந்து அறிக்கை கேட்கப்பட்டுள்ளதாகவும் அந்த தகவல்கள் இன்னும் கிடைக்காததால், விசாரணைக்கு கால அவகாசம் கோரப்பட்டது.

ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் அவகாசம் கொடுக்க கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி எம்.செந்தில்குமார் வழக்கு விசாரணையை ஜூன் 19-க்குதள்ளி வைத்தார்.

# ரூ.410 கோடி ஜிஎஸ்டி மோசடியில் ஈடுபட்டவர் கைது



பெங்களூரு: போலி நிறுவனங்கள் மூலம் ஜிஎஸ்டி மோசடி நடைபெறுவதாக கர்நாடக வணிக வரித் துறையின் அமலாக்கப் பிரிவுக்கு புகார் வந்தது. இதுகுறித்து அதிகாரிகள் நடத்திய விசாரணையில் முகமது தவுக்கீர், போலி ஷெல் நிறுவனங்கள் வாயிலாக உள்ளீட்டு வரிவரவுமூலம்கோடிக்கணக்கான ரூபாய் ஜிஎஸ்டி வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து வணிக வரித்துறை அதிகாரிகள், இந்த மோசடியில் ஈடுபட்ட முக்கிய நபரான முகமது தவுக்கீரை (42) கைது செய்தனர். ஆந்திராவை சேர்ந்த இவர் கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் போலியான ஆவணங்கள், தவறான முகவரிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி போலி நிறுவனங்களை உருவாக்கி ஜிஎஸ்டி (GST) பதிவுகளைப் பெற்று மோசடி செய்துள்ளார்.

முகமது தவுக்கீரிடம் நடத்திய விசாரணையில், ரூ.410 கோடி அளவுக்கு மோசடிப் பரிவர்த்தனைகள் செய்தது தெரியவந்தது.

இந்த மோசடியில் அவரது கூட்டாளி முகமது பாஷா என்பவரை போலீஸார் தேடி வருகின்றனர்.

# மேற்குவங்கத்தில் முதல் கட்ட தேர்தல் நடைபெற்ற 152 இடங்களில், 110 இடங்களில் பாஜக வெற்றி பெறும் மத்திய அமைச்சர் அமித்ஷா நம்பிக்கை



கொல்கத்தா: மேற்கு வங்கத்தில் முதல் கட்ட தேர்தல் நடைபெற்ற 152 இடங்களில், 110 இடங்களில் பாஜக வெற்றி பெறும். மம்தா பதவியில் இருந்து இறங்குவார் என அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.

மேற்கு வங்கத்தில் முதல் கட்ட தேர்தல் முடிந்த பின், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அளித்த பேட்டியில் கூறியதாவது: பிரதமர் மோடி மற்றும் பாஜக மூத்த தலைவர்கள் பங்கேற்ற தேர்தல் பிரச்சார கூட்டங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. முதல் கட்ட தேர்தலில் 110 இடங்களில் பாஜக வெற்றி பெறும். திரிணமூல் ஆட்சியை மக்கள் நிராகரித்ததை தேர்தல் முடிவுகள் காட்டும். இங்கு பாஜக ஆட்சிக்கு வந்தால், வெளி மாநிலத்தவரை பாஜக முதல்வராக்கும் என மம்தா பானர்ஜி வதந்தி பரப்புகிறார்.

அடுத்த முதல்வர் மேற்கு வங்கத்தில் பிறந்து, வங்கமொழியில் படித்தவராக இருப்பார். ஆனால், மம்தாவின் நெருங்கிய உறவினராக மட்டும் இருக்கமாட்டார். மம்தா முதல்வர் பதவியில் இருந்து இறங்க வேண்டும் என மேற்கு வங்க மக்கள் முடிவு செய்து விட்டனர். இங்கு பாஜக ஆட்சி அமைக்கும். மக்கள் இடையே அச்சம் விலகி நம்பிக்கை அதிகரித்து வருகிறது.

இங்கு முதல் கட்ட தேர்தலை அமைதியாக நடத்திய மத்திய போலீஸ் படையினருக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் நன்றி. இவ்வாறு அமித் ஷா கூறினார்.

# காசா போருக்கு பிறகு முதல் தேர்தல்: ஆர்வமுடன் வாக்களிக்க காத்திருக்கும் பாலஸ்தீனியர்கள்

ரமல்லா: காசா போருக்கு பிறகு முதன்முறையாக காசாவில் நகராட்சித் தேர்தல் நடைபெறுகிறது. இதில் மேற்குக் கரை மற்றும் காசாவின் மத்திய பகுதியைச் சேர்ந்தவர்கள் வாக்களிக்கவுள்ளனர்.



2023 ஆம் ஆண்டு அக்டோபர் 7 ஆம் தேதி முதல் இஸ்ரேலுக்கும் காசாவை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் அமைப்புக்கும் இடையே போர் நடைபெற்று வருகிறது. இந்த போரில் காசாவின் மேற்கு கரை பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துவிட்டது. தொடர் போர் காரணமாக, காசாவில் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தேர்தல் எதுவும் நடைபெறவில்லை.

இந்நிலையில், காசாவின் டெய்ர் எல்-பாலா பகுதியில் தேர்தல் நடத்த திட்டமிட்டிருக்கிறது. இஸ்ரேல் ஆக்கிரமித்திருக்கிற மேற்கு கரையில் சுமார் 15 லட்சம் மக்களும், டெய்ர் எல்-பாலா பகுதியில் 70 ஆயிரம் மக்களும் வசித்து வருவதால், இந்த பகுதியில் தேர்வு நடத்த அந்நாட்டு தேர்தல் ஆணையம் திட்டமிட்டிருக்கிறது.

இந்த தேர்தலில் அந்நாட்டு ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் மதச்சார்பற்ற - தேசிய ஃபதா கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள் பலர் போட்டியிடுகின்றனர். அவர்களுடன் சுயேச்சை வேட்பாளர்களையும் இணைத்து வேட்பாளர் பட்டியலை வெளியிட்டிருக்கிறது ஃபதா கட்சி. அதே சமயம், காசாவின் பாதிப் பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற ஹமாஸ் இதுவரை தனது வேட்பாளர்கள் குறித்த விவரங்களை வெளியிடவில்லை.

2006ஆம் ஆண்டு காசாவில் சட்டமன்ற தேர்தல் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 2007 முதல் ஹமாஸின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் காசாவில் தற்போது முதன்முறையாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

ஜனாதிபதி அப்பாஸுக்கு தற்போது 90 வயதாகும் நிலையில், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தனது பதவியை தக்கவைத்துள்ளார். அடிக்கடி தேர்தல்கள் நடத்தவிருப்பதாக கூறிவந்தபோதிலும் இதுவரை நடத்தப்படவில்லை. இந்நிலையில், தனது வெற்றி தோல்வியை சோதித்து பார்க்கும் ஒரு பரிசோதனையாக இந்த தேர்தலை அணுகவிருப்பதாக தெரிவித்திருக்கிறார் அப்பாஸ்.

இந்த தேர்தல் குறித்து மேற்கு கரை நகரமான துல்கரேமைச் சேர்ந்த தொழிலதிபரான மஹ்மூத் பாதர் கூறுகையில், "இந்த தேர்தலால் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படப்போவதில்லை. வேட்பாளர்கள் கட்சி சார்ந்தவர்களாகவோ அல்லது சுயேச்சையாகவோ நின்றாலும் அதனால் எங்களுக்கு எந்த பயனும் கிடைக்கப் போவதில்லை.

எப்படியும் துல்கரேமை இஸ்ரேல்தான் ஆக்கிரமித்து செய்திருக்கிறது. இங்கு தேர்தல் நடத்துவதெல்லாம் எங்களுக்கு சுதந்திரம் இருப்பது போன்ற பிம்பத்தை உலகுக்கு காட்டத்தான்" என்கிறார்.

ரமல்லா உள்ளிட்ட நகரங்களில் போட்டியின்றி வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். அதேசமயம் மேற்கு கரையில் இருக்கிற வாக்குச்சாவடிகளில் உள்ளூர் நேரப்படி காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறவிருக்கிறது.

ஆனால் டெய்ர் அல்-பாலா பகுதியில் போர் தாக்கத்தால் மின்சார பற்றாக்குறை பிரச்சினை இருக்கிறது. எனவே அங்கு மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு முடிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

இதற்காக, வாக்குப்பதிவு மையங்களில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு தனியார் பாதுகாப்பு நிறுவனமும் பணியில் இருக்கிறது என தேர்தல் ஆணையசெய்திதொடர்பாளர் ஃபரீத் தாமல்லா தெரிவித்திருக்கிறார்.

உலகின் மற்ற நாடுகளைப் போன்று இந்த தேர்தல் நடைபெறாது என்றாலும், முதன்முறையாக வாக்களிக்கும் இளைஞர்கள் உற்சாகமாக வாக்களித்து வருகின்றனர்

மிகவும் சவாலான இந்த காலகட்டத்தில் பாலஸ்தீனியர்களின் ஜனநாயக உரிமையை வெளிக்காட்ட தேர்தல் நடத்தப்படுவது பாராட்டுக்குரியது என அறிக்கை வெளியிட்டிருக்கிற ஐ.நா அமைப்பு.

# ஆனைமலை புலிகள் காப்பகத்தில் வரையாடுகள் கணக்கெடுக்கும் பணி தொடக்கம்



கோயம்புத்தூர்: ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட ஆழியார், மங்கரை வனப் பகுதிகளில் வரையாடுகள் கணக்கெடுக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நீலகிரி வரையாடுகளை பாதுகாப்பதற்கான சிறப்பு திட்டம் கடந்த 2022 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அதன்படி நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கையை அறிவது, அதன் வாழ்விடங்களை பாதுகாப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள நீலகிரி வரையாடுகளின் மொத்த எண்ணிகையில் 42 சதவீதம் ஆனைமனை புலிகள் காப்பகத்தில் உள்ளன. இந்த நிலையில் நடப்பு ஆண்டுக்கான வரையாடுகள் கணக்கெடுப்பு பணியை தமிழ்நாடு, கேரளா வனத்துறையினர் இணைந்து, இன்று (ஏப்.25) முதல் 27ஆம் தேதி வரை நடத்த முடிவு செய்தனர். அதன்படி ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட ஆழியார், மங்கரை சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்று காலை முதல் ஒரு வனவர், ஒரு வனக்காப்பாளர், இரண்டு வேட்டை தடுப்பு காவலர் என நான்கு பேர் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த கணக்கெடுப்பில் வரையாடுகளில் எச்சம், கால் தடம் ஆகியவற்றை நேரில் பார்த்தும், அதனை ஜிபிஎஸ் கருவி மூலம் பதிவு செய்தும் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் 176 இடங்களில் வரையாடுகள் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது என ஆனைமலை புலிகள் காப்பக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாடு கருப்பு நிற ரோமங்கள் மற்றும் வளைந்த கொம்புகள் கொண்டதாகும். நீலகிரி வரையாடுகளுக்கு வருடந்தோறும் டிசம்பர், ஜனவரி மாதங்கள் பிரசவ காலம் ஆகும். இந்த வரையாடுகள் தமிழ்நாடு மற்றும் கேரள வனப் பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன. மேலும் வருடந்தோறும் அக்டோபர் 7 ஆம் தேதி வரையாடு தினம் கொண்டாடப்படுகிறது.

பாதுகாப்பதற்காக ரூ. 25.14 கோடி செலவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நீலகிரி வரையாடு திட்டத்தை துவக்கி வைத்தார். இந்த திட்டத்தின் இரண்டாவது கணக்கெடுப்பு 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 140 வாழ்விடப் பகுதிகள் மற்றும் கேரளாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளுடன் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டன. இதனிடையே கடந்த மாதம் நீலகிரி வரையாடு பாதுகாப்பு மையம் அமைக்கும் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானிற்கு பயணம் வேண்டாம் இந்திய தூதரம் அறிவிப்பு

புதுடெல்லி : ஈரானில் உள்ள இந்தியர்கள் அனைவரும் வெளியேறவும், புதிதாக யாரும் செல்ல வேண்டாம் என ஈரானில் உள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.




ஈரான் - அமெரிக்கா இடையேயான போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட நிலையில், இரு நாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் பேச்சு வார்த்தையில் சுமூகமான முடிவு எட்டப்படவில்லை. இதன் காரணமாக இரு நாடுகளும் இடையே எப்போது வேண்டுமானாலும் மீண்டும் போர் தொடங்கும் என்ற சூழல் நிலவுகிறது. ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் முக்கிய அறிவிப்பை (ஏப்ரல் 23) இரவு வெளியிட்டுள்ளது. அதில் ஈரானிற்கு இந்தியர்கள் யாரும் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்றும், ஏற்கனவே ஈரானில் உள்ள இந்தியர்கள் முடிந்தவரை விரைவாக வெளியாறவும் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து இந்திய தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், "இந்தியா - ஈரான் இடையே சில விமானங்கள் இயக்கப்படுவது குறித்த தகவல் கிடைத்துள்ளது. வான்வழி சேவைக்கான கட்டுப்பாடுகள் மற்றும் சீரான விமான சேவைக்கான நிச்சயமற்ற சூழல், ஈரானிற்கு செல்லும் சர்வதேச விமான சேவையை தொடர்ந்து பாதித்து வருகிறது. மேற்காசிய பகுதியில் பதற்றமான சூழல் தொடரும் நிலையில், இந்தியர்கள் ஈரானிற்கு பயணம் மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

அதே போல், ஈரானில் உள்ள இந்தியர்களும் விரைவாக வெளியேற அறிவுறுத்தப்படுகிறது. இந்திய தூதரகத்தின் ஒங்கிணைப்புடன் தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் இருந்து எல்லையை கடக்க வலியுறுத்தப்படுகிறது" என குறிப்பிட்டுள்ளது.

மேலும், இந்தியர்கள் தூதரகத்தை தொடர்பு கொள்ள ஏதுவாக +989128 109115; +989128 109109; +989128109102; +989932179359 ஆகிய தொடர்பு எண்களும், cons.tehran@mea.gov.in என்ற இமெயில் முகவரியும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஈரானில் வாழும் இந்தியர்கள், வெளியேற தேவையான தகவல் மற்றும் உதவிகளை தூதரகத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் அளித்த தகவலின் படி, ஈரானில் சுமார் 7,500 இந்தியர்கள் இருக்கிறார்கள். மேற்காசிய போர் காரணமாக அவர்களில் 1,041 மாணவர்கள் உட்பட 2,361 பேர் ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜான் வழியாக ஏற்கனவே இந்தியாவிற்கு அழைத்து வரப்பட்டனர். கூடுதலாக வங்காளதேசம், இலங்கை மற்றும் கயானா நாடுகளை சேர்ந்த 3 பேரையும் இந்திய அரசு மீட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா - ஈரான் இடையே போர் நிறுத்தம் நீண்டக்கப்பட்டுள்ள நிலையில், பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அதே நேரம், இஸ்ரேலும் எந்த நேரமும் தாக்குதலை தொடங்கும் வகையில் தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளது. இதனால் அப்பகுதியில் மீண்டும் பதற்றமான சூழல் நிலவுகிறது.

# H1B scare: Bill moved in US Cong to pause visa programme for 3 years. What it means for Indians

The fresh obstacle for H-1B visa programme comes months after US President Donald Trump announced a $1,00,000 fee on fresh applications.

H-1B visa programme, using which US technology companies hire Indian and other foreign workers, faces another hurdle under the Donald Trump-led United States administration with a group of Republican lawmakers in the US Congress putting forward a legislation seeking a three-year ban. The fresh obstacle for H-1B visa programme comes months after US President Donald Trump announced a $1,00,000 fee on fresh applications. Republican lawmakers in the US Congress has put forward legislation seeking a three-year suspension of the H-1B visa programme, arguing that it has been misused to replace American workers with lower-cost foreign labour.




Congressman Eli Crane of Arizona introduced the End H-1B Visa Abuse Act of 2026, with support from seven fellow Republican lawmakers as co-sponsors.

The proposed bill outlines several changes to the H-1B programme, including cutting the annual cap from 65,000 to 25,000, setting a minimum salary requirement of $2,00,000 per year, and preventing H-1B visa holders from bringing dependents to the United States.

Lawmakers Brian Babin, Brandon Gill, Wesley Hunt, Keith Self (all from Texas), Andy Ogles (Tennessee), Paul Gosar (Arizona), and Tom McClintock (California) have joined as original co-sponsors.

Singling out Indians is important because the H-1B visa programme is widely used by US technology firms to hire foreign workers, with Indian professionals - particularly in technology and healthcare - forming one of the largest groups of recipients. The bill proposes additional reforms such as replacing the lottery system with a wage-based selection process, requiring employers to confirm they cannot find qualified American workers and have not carried out layoffs, prohibiting H-1B workers from holding multiple jobs, and restricting third-party staffing agencies from employing them.

It also calls for barring federal agencies from hiring or sponsoring nonimmigrant workers, ending Optional Practical Training (OPT), and reinforcing the temporary nature of nonimmigrant visas by preventing H-1B holders from transitioning to permanent residency.

Further, the proposed changes would require nonimmigrants to leave the US before switching to another nonimmigrant visa category.

"The federal government should work for hardworking citizens, not the profit margins of massive corporations. We owe it to the American people to prevent the broken H-1B system from boxing them out of jobs they are qualified to perform," the report quoted Crane as saying. Can US legally pause H-1B visa programme?

Rahul Reddy, a Houston-based immigration attorney, said that the US can in theory legally pause H-1B visa programme as the Congress has the authority to do so. If Congress decides to freeze a visa category, the administration must implement it, an Indian Express report quoted Reddy as saying. He pointed to existing restrictions affecting certain countries as evidence.

# El Nino explained: Why India could see less rain and more heat in 2026 due to this weather cycle

India could face a difficult weather year in 2026 as global climate signals point to the possible return of El Nino, according to the World Meteorological Organisation (WMO).

Early warnings suggest that ocean temperatures in the Pacific are rising again, which increases the chance of El Nino conditions developing between May and July. Climate agencies also say the event could strengthen later in the year, raising concerns about heat, rainfall, and water systems across regions.

What is El Nino?

El Nino is a natural climate pattern where sea surface temperatures in the central and eastern Pacific Ocean become warmer than usual. This change may sound small, but it disrupts wind and rainfall patterns across the world.

It is part of a larger cycle called ENSO (El Nino-Southern Oscillation), which alternates between El Nino (warm phase), La Nina (cool phase) and Neutral phase.

The World Meteorological Organisation says conditions are currently neutral, but models are now pointing towards a transition into El Nino in the coming months.

"After a period of neutral conditions at the start of the year, climate models are now strongly aligned, and there is high confidence in the onset of El Nino, followed by further intensification in the months that follow," said Wilfran Moufouma Okia, Chief of Climate Prediction at WMO, as per news agency He added, "Models indicate that this may be a strong event, but the so-called spring predictability barrier is a challenge for the certainty of forecasts at this time of year. Forecast confidence generally improves after April,"



In simple terms, scientists are increasingly confident El Nino will form, but exact strength is still being tracked.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.